மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிள்ளைகளின் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆவணி மீ 23 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 7 (08 . 09 . 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 238

## அனைத்துக் கட்சி மாநாடு:

# பிரதான எதிர்க்கட்சிகள் அழைப்பை ஏற்றன!

### அமைச்சரவைக் கூட்டத்தின் பின் தகவல்

கொழும்பு, செப். 8

எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டில் பங்குபற்றுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை ஐந்து கட்சிகள் கொண்ட எதிர்க் கட்சி முன்னணி உட்பட பத்துக் கட்சிகள் ஏற்றிருக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு ஜே. வி. பி. உட்பட 23 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கை முற்போக்கு முன்னணி ஆகியவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

இதுவரை பிரதான எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோசலிஷ அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகளும் லிபரல் கட்சி, ஈ. என். ஜே. பி. ஆகியவையும் உட்பட பத்துக் கட்சிகள் அழைப்பை ஏற்றிருக்கின்றன.

அனைத்துக் கட்சி மாநாட்டில் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளை அரசாங்கம் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும். நிகழ்ச்சி நிரலை விரும்பியவாறு மாற்றி அமைத்தும் கொள்ளலாம்.

— இவ்வாறு திரு. ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

'' நாடாளுமன்றத்தைக் கலைத்து தேசிய அரசு அமைக்கும்படி ஐந்து எதிர்க்கட்சிகளைக் கொண்ட எதிர்க்கட்சி முன்னணி விடுத்த அழைப்பை ஏற்று நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?'' — இப்படி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கவிடம் செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்கு '' அரசமைப்புச் சட்டத்தின்படி அரசு நடந்து கொள்ளும் '' என அமைச்சர் பதிலளித்தார். (உ-1)

### ஜே.வி.பி.க்கு தூது?

கொழும்பு, செப். 8

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டில் ஜே வி பி. யைக் கலந்து கொள்ளச் செய்வதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா தூது அனுப்பியிருக்கிறாராம்.

இப்படி கொழும்பு வட்டாரங்களில் பேச்சடிபடுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

### ஞாயிறு வரையே டீசல் போதும்

யாழ்ப்பாணம், செப். 8

சுன்னாகம் மின் நிலைய ஜெனரேட்டர்களுக்குத் தேவையான ஹெவி டீசல் ஒரு சில தினங்களில் வந்து சேராது விட்டால், சுழற்சிமுறை மின்சார விநியோகத்தில் தடை ஏற்படும் என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்போதுள்ள ஹெவி டீசல் கையிருப்பு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பட்டுமே மின்சார உற்பத்தி செய்வதற்குப் போதுமானது என்றும் அந்த அதிகாரிகள் கூறினர். (ஒ-8)

## யாழ் மாவட்டத்தில்

### மீண்டும் தந்திச் சேவைக்கு வசதி செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீண்டும் தந்திச் சேவையை ஆரம்பிக்க வசதியாக தொலை அச்சுக் கருவிகளை (ரெலிபிறின்டர்களை) தந்து உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் பல பிரதான தபாலகங்களில் பொருத்தப்பட்ட தொலை அச்சுக் கருவிகள் மூலம் நீண்ட காலமாகத் தந்திச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கடந்த கால அசம்பாவிதங்களின்போது இக்கருவிகள் காணாமற்போயின. இக்கருவிகள் மீளவும் வழங்கப்படாததால் தந்திகள் இப்போது தபாலிலேயே அனுப்பப்பட்டு வருகின்றன.

தந்திச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக தொலை அச்சுக் கருவிகளை வழங்குமாறு அஞ்சல், தொலைத்தொடர்பு சேவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளை தபால் அமைச்சரைக் கேட்டுள்ளது. (அ-3)

### மொறவெவவில் கண்ணி இரு சிப்பாய்கள் பலி!

கொழும்பு, செப். 8

திருகோணமலைக்கும், அநுராதபுரத்துக்கும் இடையில் மொறவெவவில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்தனர். மூவர் படுகாயமடைந்தனர்.

நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியை அகற்ற முயன்றபோதே அது வெடித்ததாகக் கூறப்பட்டது. (உ-1)

### ஆற்றில் குளித்த படையினரின் துப்பாக்கிகள் அபகரிப்பு!

#### காவலுக்கு நின்றவர் சுட்டுக்கொலை

கொழும்பு செப். 8

கந்தளாயில் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்களிடமிருந்து தீவிரவாதிகள் நான்கு ரி-56 ரக துப்பாக்கிகளை அபகரித்துச் சென்றனர்.

மூன்று சிப்பாய்கள் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த போது மற்றொரு சிப்பாய் கரையில் கைத்துப்பாக்கியுடன் காவலுக்கு நின்றாராம். அவருக்கு அருகே மற்றைய மூன்று சிப்பாய்களினதும் துப்பாக்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

அவ்வேளை அங்குவந்த தீவிரவாதிகள் காவலுக்கு நின்ற சிப்பாயைச் சுட்டுக் கொன்றுவிட்டு நான்கு துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றனர். (உ-1)

### தென்பகுதியில் கொலைகள் குறைவதாக சிறில் தகவல்

கொழும்பு, செப். 8

தென்பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் கொலைச் சம்பவங்கள் பெருமளவு குறைந்திருப்பதாகப் பாதுகாப்புத் துணை அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

தினசரி 150 கொலைகள் தென்பகுதியில் இடம்பெற்று வந்தன. ஆனால் கடந்த வாரத்தில் இது தினசரி 15, 20 ஆகக் குறைந்திருக்கிறது.

எனினும் பாதுகாப்புப்படை வீரர்களின் வீடுகள் எரிக்கப்படுவது அதிகரித்துவருகிறது. கடந்தவாரத்தில் மட்டும் முப்பதுக்கும் அதிகமான வீடு

(6ஆம் பக்கம் பார்க்க)

### பிரேமா - எதிரணியினர் இன்று சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, செப். 8

ஐந்து எதிர்க்கட்சிகளுடனான ஜனாதிபதியின் சந்திப்பு இன்று மாலை 6, 30 மணிக்கு ஜனாதிபதியின் செயலகத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்கள் இச்சந்திப்பில் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## அமைதிப்படை விவகாரம் குறித்து அமைச்சர் ரஞ்சன் - ராஜீவ் பேச்சு

### திருப்திகரமாக அமைந்ததாகத் தகவல்

பெல்கிறேட், செப் 8

யூகோஸ்லேவேகியா தலைநகர் பெல்கிறேட்டில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

நாற்பது நிமிடங்கள் வரை நீடித்த இச்சந்திப்பினால் அமைதிப்படை விவகாரம் தொடர்பாக நிலவிய கருத்து வேற்றுமைகள் மேலும் குறைந்துள்ளன என்று இந்திய அதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்குவது, வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குவது, அமைதிப்படை வெளியேறிய பின்னர் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் சமாதானம் பேணப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப்படுவதற்காக சமாதானக் கமிட்டி ஒன்றை அமைப்பது ஆகியன பேச்சுக்களின்போது விவாதிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

#### திருப்தி

இப்பேச்சுக்கள் திருப்திகரமாகவும் பயனுள்ளவையாக இருந்தன என்று இந்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ராஜீவுக்கும் ரஞ்சனுக்கும் பேச்சுப் பொருத்தம் உண்டோ...? அதுதானே எல்லா இடங்களிலும் பேசிக்கொண்டே இருக்கினம்......

### அடைக்கல அன்னை திருநாள் இன்று

குருநகர், செப். 8

யாழ்நகர் ஆஸ்பத்திரி வீதி அடைக்கல அன்னை (ஓ எல். ஆர்.) ஆலய வருடாந்த நவநாள் திருநாள் இன்று வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இன்று காலை 7-00 மணிக்கு நடைபெறும் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

மாலை 4-3 மணிக்கு திருச்சொருப பவனி நடைபெற்று சொருப ஆசீர்வாதம் வழங்கப்பெறுவதுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவுபெறும்.

(சிறப்பிதழ் உள்ளே)

(ஒ-51)

### சுபநேரம்

(08 9 - 1989)

ஆவணி 23 வெள்ளிக்கிழமை

நக்ஷத்திரம்: கேட்டை

சுபநேரம்:

06-04 முதல் 07 34 வரை

ராகுகாலம்:

10-34 முதல் 12-04 வரை

இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி நள்ளிரவு 12,17வரை

### ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை குறித்து அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 8

சகல அரசுப் பாடசாலைகளும் திறக்கப்பட்ட ஆறு வாரங்களின் பின்னரே ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நடத்தப்படும்.

—இப்படி கல்வி அமைச்சு அறிவித்து உள்ளது.

பரீட்சைக்கான திகதி நிர்ணயிக்கும்போது பரீட்சைகளை குழப்பவேண்டாம் என்று கல்வி அமைச்சு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளது.

உயர்தர பரீட்சைஎப்போது நடைபெறும் என்பதில் மாணவர் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. (ஒ-எ)

### பல்கலைக்கழக மாணவருக்கு 11, 12இல் மகாபொல நிதி

யாழ்ப்பாணம், செப் 8

யாழ் - பல்கலைக்கழகத்தில் மகாபொல புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் வழங்கப்படும்.

மகாபொல கொடுப்பனவை பல்கலைக்கழக நிதியில் இருந்து வழங்குமாறு உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பணித்துள்ளார்.

பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கலைப்பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு 11 ஆம் திகதியும், வர்த்தக நிர்வாகம், வர்த்தகத்துறை மாணவர்களுக்கு 12 ஆம் திகதியும் கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கிறது.

கொழும்பில் இருந்து இதுவரை மகாபொல கொடுப்பனவு நிதி அனுப்பப்படாததை அடுத்தே யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### நாவலர் மடம் பகுதியில் நேற்று நடந்த மோதல்

வல்வெட்டித்துறை, செப். 8

நாவலர் மடத்தடிப் பகுதியில் நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மூவர் உயிரிழந்தனர் என்றும் அந்தமூவரில் இருவர் ஜவான்கள் என்றும் சொல்லப்பட்டது. எனினும் இச் செய்தியை ஊர்ஜிதம் செய்துகொள்ள முடியவில்.

பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

பொதுமக்கள் சிலர் அப்பகுதியை விட்டு வெளியேறியபடி இருந்தனர். போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இதேவேளை வல்வெட்டித்துறைப் பகுதியிலும் நேற்று தீவிர தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இளைஞர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். (ரு 160-3-10)

### ரயில்கள் இன்று வரும்

யாழ்ப்பாணம், செப். 8

சரக்கு ரயில் ஒன்றும், பயணிகள் ரயில் ஒன்றும் யாழ் நகருக்கு இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயணிகள் ரயில் நாளை இங்கிருந்து கொழும்புக்குப் புறப்படும்.

இதுகுறித்து யாழ் ரயில்வே பகுதியினருக்கு நேற்று அநுராதபுரத்திலிருந்து அறிவிக்கப்பட்டது.

ஆயினும் திடீர் அசம்பாவிதம் எதுவும் நிகழும் பட்சத்தில் சேவை ரத்துச் செய்யப்படலாம் எனவும் சொல்லப்பட்டது. (அ-9)

### சிமெந்து தொழிற்சாலை ஜெனரேற்றரை மின்சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

காங்கேசன்துறையில் உள்ள லங்கா சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள ஜெனரேற்றரை மின்சார சபையிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று, நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகலில் யாழ் செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் லங்கா சிமெந்து நிறுவனத்தின் அதிகாரிகள், மின்சார சபை அதிகாரிகள், அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அதிகாரிகள் காங்கேசன்துறைக்குச் சென்று சம்பந்தப்பட்ட ஜெனரேற்றரையும் பார்வையிட்டனர்.

பிரஸ்தாப ஜெனரேற்றரில் ஏற்பட்டிருக்கும் பழுதுபற்றி ஆராயப்பட்டது.

அடுத்த சில தினங்களில் மின்சாரசபையிடம் ஜெனரேற்றரை கையளிப்பது என்றும், அதேவேளை ஜெர்மனியில் உள்ள பிரஸ்தாப ஜெனரேற்றரை உற்பத்தி செய்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஒரு வாரத்திற்குள் ஜெனரேற்றரைத் திருத்த நடவடிக்கை எடுப்பது என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

### சாவகச்சேரி அபிவிருத்தி: ரூ. 300 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப்.8

சாவகச்சேரித் தொகுதியின் அபிவிருத்தி வேலைகளுக்கென வடக்கு, கிழக்கு மாகாண அரசு 300 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

★ இத்தொகுதியிலுள்ள வீதிகளின் அவலநிலை.

★ சாவகச்சேரி ஆஸ்பத்திரியை மக்களின் தேவைக்கு ஏற்றதாக விஸ்தரிக்க வேண்டியதன் அவசியம்.

★ கிராமப்புற மக்களின் நலனைக்கருதி மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள்.

மேற்கண்ட விடயங்கள்குறித்து மாகாணசபையின் யாழ். மாவட்ட உறுப்பினர் திரு. செல்லத்துரை ரவீந்திரன், முதலமைச்சர் திரு. வரதரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Radiogram, Tape Recorder, TableFan விற்பனைக்கு உண்டு. இத்துடன் சிறிது திருத்த வேலைகளையுடைய Fridge உம் உண்டு. புதிய மொடல் C-50 Honda Motor Cycle இற்கு மாற்றம் செய்யலாம். இ. வத்சலன் C/o, Ramsons சுதுமலை வடக்கு, மானிப்பாய். (2072)

மிக நல்ல நிலையில் உள்ள canon வீடியோ கமெரா canon வீடியோ டெக் (நஷனல் NV 100 போல் உள்ளது) tuner, chager என்பவற்றுடன் விற்பனைக்கு உள்ளது, எவரிவிஷன் 21 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (சி/3638)

Kenwood Chef, sisil Fridge food, Warmer, Drink Mixer cooler Loud speakers, Vedio Deck, Tuner Radio, Show case மீன் தொட்டி Love birds Cege இரும்புக் கதிரை செற், பாவித்த நிலை கதவுகள், மற்றும் மின்சார உபகரணங்களுக்கு Jeyas Auction Mart, No, 161 Main Street Jaffna: (2117)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books). அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் 'புத்தகசாலை' இல:02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: (1551)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் சேவல் குஞ்சுகள் (cobb) புரொயிலர் குஞ்சுகள் (13-9-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (2075)

### கோழிக்குஞ்சுகள் விற்பனை

Hyline சிவப்பு, வெள்ளை, பேடு அதி சிறந்த Sekline பேடு புரொயிலர் Dekalb ஒரு நாள் ஒரு வாரக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதியவும்: P. பத்மநாதன் மாரீசன் கூடல், (சந்திக் கருகில்) இளவாலை: (2106)

### தேவை

அலுவலக பெண் உதவியாளர் தேவை: முற்பணம் கட்டக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் A/L சித்தி அடைந்தவராகவும் அலுவலகத்தை திறமையாக நிர்வகிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தொடர்பு ஆ. சி. க. தமிழழகன், மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை: (2115)

3'' அல்லது 4'' பம்ப் டிராக்டரில் பொருத்தி இறைக்கக் கூடியதாக அல்லது இன்ஜினுடன் சேர்ந்த பம்ப் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. சோதிநாதன், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்; அல்லது சோமரட்ணம் அரசடி வீதி, திருநெல்வேலி, கிழக்கு (1891)

### WANTED

Wanted an experienced middle aged lady in Managing a small Industry to deal with foodstuffs meant for export. please send your Bio - Data on or befor 15-09-89 to the following address Salary negotiable 90 C/o Uthayan, Jaffna: (2107)

### ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை

கட்டிட அமைப்பு நிறுவனத்திற்கு Measurements & Bills அடிக்கக்கூடிய ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை: சம்பளம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்: உடன் விண்ணப்பிக்கவும். C/o 91, உதயன், யாழ்ப்பாணம். (2118)

### சேவை

திருமண சேவை காணி வாங்கவும், விற்பனை செய்யவும் காணி அளவை படம், வரைதல் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) தமிழ் மலர் சேவிஸ், ஆ. சி. த. தமிழழகன், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை: (2113)

### சேவை

பாவித்த தரமான பொருட்களை வாங்க விற்க அல்லது பொருளுக்குப் பொருள்மாற்றிப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய புதியஸ்தாபனம்: Jeyas Auction Mart, No.161 Main Street, Jaffna: (2116)

### தவறிவிட்டது

அருந்ததி பத்மநாதன், 34A, அத்தியடி, புதவீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசமிடப்பட்ட எனது அடையாள அட்டை (இல-606420900 X) யாழ். மின்சாரநிலைய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: (2120)

### A/L G. A. Q. இந்துநாகரீக நூல்கள்

இந்து நாகரீகத்தில் அரசியல் பொருளியல், சட்டவியல், சமூகவியல், கல்வியியல், சிந்தனைகள், இந்து நாகரீகத்தில் கலைகள் ஆசிரியோன்: K. M செல்வரத்தினம், B A Hons. Dip Hindu civilizarion முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளர், அரசினர் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி, கிடைக்குமிடம். பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா புத்தகசாலைகள்: (2078)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில். நேரம் பகல் 10 - 11 30மணி ஆரம்பம்; 11- 9- 89 முன் பதிவு செய்தல் வேண்டு. S B Iyar, 12 வைமன் வீதி, நல்லூர். (1898)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி 3601)

## ஜேர்மன் - வாராந்தப் பயணம்

(கடவுச்சீட்டுத் தந்து ஒரு வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளலாம்)

✱ Papua New Guinea (பப்போ நியூ கினியா) Labourer 1000 USD

✱ சிங்கப்பூர் தாதிமார் (ஏழு வெற்றிடங்கள் மட்டுமே உண்டு) பணிப்பெண்கள் — 4200/-

அவுஸ்திரேலியா குழுவின் பயண முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

குறிப்பு: எந்த நாட்டுக்கும் முற்பணம் அறவிடப்பட மாட்டாது PASS PORT - BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

## நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி காங்கேசன்துறை

(சி/3610) (T. B வைத்தியசாலைக்கு முன்பாக)

### பிரயோக கணிதம் 89

உயர்தர பிரயோககணித மாதிரி வினாத்தாள்களும் விடைகளும், வெளியாகியுள்ளன: மூன்று தொடை வினாத்தாள்களும், விடைகளும் A/L 89, மாணவர்கள் நேரம் கணிப்பிட்டு விடையளிப்பதன் மூலம் பரீட்சைகளுக்குத் தம்மைத்தயார் செய்வதற்கேற்றது. சகலபிரபலபுத்தக விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்: ஆசிரியர் சி. துரையப்பா சென் ஜோன்ஸ் கல்லூரி, (2056)

## காரைநகரில் நாளை கலை நிகழ்ச்சி

காரைநகர் கிழக்கு வீதி உதய சூரியன் கலை மன்றத்தினால் நாளை சனிக்கிழமை 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

காரை நகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய நடராஜா மண்டபத்தில் திரு: செ. தேவதாசன் (அதிபர்) தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிரதம விருந்தினராக திரு. எஸ். ஏ. ஈ. ஏகநாதன் (சட்டத்தரணி) கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக திரு: எஸ் எஸ். சிவரத்தினம் [உதவி அரசாங்க அதிபர் ஊர்காவற்றுறை] கலந்து கொள்வார். [இ-73]

## குழந்தைகள் தின விழா

அரியாலை சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவான 'குழந்தைகள் தினம்' நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக திருமதி நா. பாலசிங்கம் அவர்களும், குழந்தைகளை மகிழ்வுபடுத்துவதற்காக உயர்திரு ச. பாலசிங்கம்(சங்கீதபூஷணம்) அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக திரு: சிவசுப்பிரமணியம் (வடபிராந்திய சர்வோதய இயக்குநர்) அவர்களும் கலந்துகொள்ளவுள்ளார். (இ-10)

## UNIVERSITY OF JAFFNA

### Tender Notice

Supply Of Generators

Sealed Tenders are invited for the Supply of 3 Nos. 25 KVA Generaters

Tenders should Specify the following details:

a. Make & Country of Origin
b Engine Make
c. Guranteed Period
d. Availability Of Stock
e. Terms and Conditions about Payments Catalogues also should be annered

Generators to be delivered at the University of Jaffna.

All envelopes containing the tenders be marked "Tender for 25 KVA Generators" and forwarded to Bursar. University of Jaffna, on or before 20-09-1989 at 3 00 P m and tenders will be opened on the same day at 3 30 P.m. in the Board Room of the University of Jaffna.

Actg. Registrar.

(C/3320)

## மோட்டார் சைக்கிள் தவறிவிட்டது

சென்ற வியாழக்கிழமை 31 - 08 - 1989 அன்று மாவிட்டபுரம் அரசடிச் சந்தியில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக HONDA C - 90 ஒன்று தவற விடப்பட்டது. சாம்பல்நிற மானதும், நம்பர் 101சிறீ4711 உடைய இந்த வாகனத்தை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இங்கு ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

டேவிட் வேடினன்ஸ், இல: 3, இரத்தினம், ஒழுங்கை, கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்: (2123)

## தேவை

(ஜக்பொட்) சோலட்மெஷின்கள்

[Jack Pot] Slot Machines
Rol - A Top/ Century/
Gulden Bell chief/
Wareagle

✱ நல்ல விலை தரப்படும்:

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:

**Mr. A. C. H. Najumudeen**
C/o Murshitha Trades
75, Grand Bazaar.
JAFFNA. (2071)

நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ்ப்பாணப் பிரிவு

## துளையிடுவதற்கான விலைகூறல் (Quotation For Drilling)

நீர்ப்பாசனத் திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவின் கீழ் உள்ள யாழ் தீபகற்பத்திலும், தீவுப்பகுதியிலும் விட்டம் 4 அங்குலமும் அதற்கு மேற்படவும் அளவுடைய துளையிடுவதற்கு ஒரு நீள அடி (Por Linear Foot) ஆழத்திற்கான விலை கூறல்களை மேற்படி வேலையில் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்தோ அல்லது தனியாட்களிடமிருந்தோ கோரப்படுகின்றது.

மேற்படி நிறுவனங்களோ அல்லது தனியாட்களோ தங்கள் விலை கூறல்களை 22 – 09 – 1989 க்கு முன்னதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பிரிவு, நாவற்குழி, கைதடி என்னும் விலாசத்தில் தபாலிலோ அன்றி நேரிலோ சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

மேலதிக விபரங்கள் ஏதாவது தேவைப்படின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் மேற்படி காரியாலயத்தில் கிழமை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. விஸ்வலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணப் பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
நாவற்குழி கைதடி
89 – 09 – 01 (C/3323)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் திரு. வல்லிபுரம் சிவசோதி அவர்கள்

(உரிமையாளர்; திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

மலர்வு: 18- 05- 1943 உதிர்வு: 13- 06 1989

அன்பினால் எம்மை ஆட்சி செய்தவர், பண்பாலும் பாசத்தாலும் எம்மைப் பிணைத்தவர், எல்லோர்க்கும் இனியவர். சிரித்த முகத்தினர், குணத்தின் குன்று எங்கள் அணையாத சோதி. எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த 90 ஆம் நாளான 10- 09 1989 ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் சபிண்டீகரணமும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமகள் குடும்பம்.

முருகமூர்த்தி ஒழுங்கை, கரவெட்டி. [2076]

மலிவு விலையில் அறிமுகம்!

## CHILTON TRIP SWTICH

மின் பொறியியலின் புகழ் மிக்க **Ottermil Chilton Ltd.** ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

## சுந்தர்சன்

சந்தை முன், மானிப்பாய். (சி/3181)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



தோற்றம்: 07-04-1907

மறைவு: 10-08-1989

### திருமதி பொன்னம்மா வைத்திலிங்கம்


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08-09-1989 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலையில் நடைபெறும். மறுநாள் 09-09-1989 சனிக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அத்துடன் 12-08-1989 இல் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்களுக்கும் பல்வேறு விதத்தில் உதவிய யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

குடும்பத்தினர்,

சுதுமலை வடக்கு,
மானிப்பாய், (2111)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### செல்வன் கனகரத்தினம் ரவீந்திரன் (ரவி)

(கட்டிட ஒப்பந்தக்காரர்)

உற்பவம்: 24-04-1970 நர்பதம்: 26-07-1989

இதயக் கோயிலிலே எழுந்தருளிய அன்புத் தெய்வமே!
எண்ணங்களின் கற்பக கிரகத்தில்
வைத்துப் பூஜிக்கப்படுபவனே
உதயக் கதிரவனின் ஒளியேந்தும் கமலம் போல்
உன் முக மலர்ச்சி எம்மையே நிதம் வாட்டுதையா!

08-09-1989 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்;

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை: (2081)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்;

பொருள்:

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்க மாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.


உதயன்

இல: 392/8, நாவலர் வீதி, தொலைபேசி: 24606
யாழ்ப்பாணம். 22078
07 - 09 - 1989 பெரு இல: 88


## பண்பு பயில்வது எப்போது?

நாட்டின் இப்போதைய நெருக்கடியைத் தணிப்பதற்கு. தீர்ப்பதற்கு பல மாற்று வழிகள் முன் வைக்கப்படுகின்றன: காபந்து அரசு, தேசிய அரசு, நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றி முந்திய பிரதமர் முறையைக் கொண்டு வருதல், அதன் பொருட்டு அரசமைப்பை முற்றாக மாற்றுதல் என்பன வெவ்வேறு தரப்பினர் சார்பிலும் முன் வைக்கப்பட்ட முக்கிய ஆலோசனைகளாகும்.

இவற்றில் நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு உடனடியாக உதவக் கூடியது எது? நடைமுறைச் சாத்தியமானது எது? எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கக் கூடியது எது? பன்முகப்பட்ட அம்சங்களைப் பூரணப்படுத்தி வெற்றி தரக்கூடிய வழிமுறை அல்லது ஆலோசனை என்ன என்பது தீர்மானிக்கப்பட வேண்டி உள்ளது.

முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளில் எதனைக் கைக்கொள்வது என்பது குறித்து கருத்து ஒற்றுமைக்கு வரும் பொருட்டே ஜனாதிபதி அனைத்துக் கட்சிகள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்; மொத்தம் பதினெட்டு அரசியல் கட்சிகளுக்கு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாட்டின் பிரதானமான பிரச்சினையைத் தீர்ப்பதில் தமது அல்லது தமது கட்சியின் முடிவை மட்டும் திணிக்காமல், எல்லோரையும் அரவணைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு ஒரு பொதுத் தீர்வைக்கொண்டு வருவதற்காகவே இவ்வாறான அனைத்துக் கட்சிகள் மாநாடு அரசினால் நடத்தப்படுவது உண்டு.

பல முனைகளைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறுபட்ட கொள்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்களை உடையவர்கள், கருத்து ஒற்றுமைப்படுவது என்பது கல்லில் நார் உரிப்பது போன்ற செயலாகும்; ஆயினும் ஜனநாயகப் பண்பும், பாரம்பரியமும் பேணப்படுவதற்கு அந்தக் கருத்து ஒற்றுமை அவசியம்.

நாடு மிக மோசமாகச் சீரழிந்து கொண்டிருந்த போதிலும்; அரசியல் கட்சிகள், தலைவர்களிடம் கருத்தொருமை காணவேண்டும் என்ற பண்பும், நாட்டை-மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு தரப்பாரும் முன் வைத்திருக்கும் யோசனைகளில் சில தமது கட்சி இலாபம் கருதியவையாகவும்; மாற்றுத் தரப்பாரைச் சாடுபவையாகவும் அல்லது வீழ்த்துபவையாகவும் இருப்பதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு ஆலோசனையையும், நுணுக்கமாக; ஆழமாக அலசி ஆராய்ந்தால் அங்கு மக்கள் நன்மையை விட கட்சி நன்மையே பிரதிபலிப்பதைக் காணமுடியும்.

அரசியலில், மக்களின் நன்மை முதன்மைப்படுத்தப்படாமல் கட்சி அல்லது குழு நன்மைக்கு அந்த இடம் அளிக்கப்படும்போது, பொதுத் தீர்வை எட்டுவது அல்லது அதற்கான வழிமுறையைக் கண்டறிவது என்பது கஷ்டம்.

மக்கள் நலனுக்காக அவர்களின் வாழ்வுக்காக கட்சி இலாபத்தையும், தலைவர்களின் சுயலாபத்தையும் விட்டுக்கொடுக்கும் பண்பு இன்னமும் இலங்கை அரசியல்வாதிகளிடம் குடிகொள்ளவில்லை; அந்த நற்பண்பு வளரும் வரை எந்தப் பொதுப் பிரச்சினைக்கும் உகந்த, உரிய நிரந்தரத் தீர்வைக் காண்பது கடினம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசியல் தலைவர்கள் வெவ்வேறு கோணப்பட நின்றதால் அது தீராப் பிரச்சினையாகத் தொடர்வதைக் காண்கிறோம். அதனை ஒரு படிப்பினையாக வைத்தேனும், பாடமாகக் கொண்டேனும் அரசியல் வாதிகள் தமது பண்பை மாற்றிக் கொள்ளாமல் இருப்பது நாட்டைப் பிடித்த பீடையாகும்.

தமது நோக்கங்களைச் சாதிக்க முயன்றுகொண்டு தேசியப் பிரச்சினைகளை அணுகுவதில் அர்த்தமில்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்வது எப்போது?

## உவந்து நீ அருள்வாய்!

துர்க்கையே உன்னைத்
தினம்தினம் தொழுவேன்!
உய்வதென் ஆசை
உன் நெறி வழுவேன்!
வான்கவி யாகி
வையக மெல்லாம்
தேன்தனி சிந்தும்
திருவினைத் தருவாய்!
சிறுபிள் யானே
சிதைத்தலும் கூடும்
உறுபிணி வராது
உவந்து நீ அருள்வாய்

—அ. நிக்ஸன்

(இன்று துர்க்கை அம்மன் 8ஆம் திருவிழா)

# அரச அலுவலகங்களில் வீண் விரயத்தை நீக்குவதற்குத் துரித நடவடிக்கை

## துணை அமைச்சரின் கீழ் தனிப்பிரிவு

கொழும்பு, செப்: 8

அரசாங்க அலுவலகங்களில் வீண்விரயத்தை போக்கும் விசேஷ திட்டம் குறித்து அரசாங்க நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. சமகே சகல திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்:

சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"அதிகாரிகளின் தடைகளை நீக்குதல், இலகுவழிமுறைகளை கையாளுதல், படிவங்களின் உபயோகத்தைக் குறைத்தல் என்பன போன்ற விடயத்தில் ஜனாதிபதி கூடிய கவனம் எடுத்துள்ளார்;

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்பொருட்டு, அதிகாரிகளின் தடைகளை நீக்குவதற்கு, பெரும்பாக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் இதற்கென புதிதாக தனி ஒரு அமைச்சு ஆரம்பிக்கப்படவில்லை;

இதை ஒரு நிறைவேற்றுச் செயலாளரும், 12 உதவியாளர்களுமே பரிபாலிக்கின்றனர்;

வீண் விரயத்தைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, நாம் அன்றாடம் உபயோகப்படுத்தும் தேவையற்ற படிவங்களின் சுற்றோட்டத்தில் போதியளவு கவனமும், அக்கறையும்செலுத்துவதன்மூலம் குறைத்துக்கொள்ளலாம்;

அரசாங்க அலுவலகங்களில் வீண்விரயத்தை இல்லாதொழிக்கும் பொருட்டு நாம் கையாளும் நடைமுறைகளைச் சிறந்தமுறையிற் செயற்படுத்துவதற்காக நேரடியாக துணை அமைச்சர் ஒருவரின் செயலாளரின் மேற்பார்வையின்கீழ் இயங்கும் பிரிவு ஒன்றை ஆரம்பித்தல்வேண்டும்:

இப்பிரிவை குறிப்பிட்ட துணை அமைச்சர் நேரடியாக மேற்பார்வை செய்வதுடன் இது வெற்றிகரமாக இயங்குகின்றதா என மறுபரிசீலனையும் செய்யும் பொறுப்பையும் கொண்டிருப்பார்;

ஒவ்வொரு அமைச்சும் இது சம்பந்தமாக தனது மாதாந்த அறிக்கையை கொள்கை திட்டமாக்கல் திட்டம் செயற்படுத்தல் அமைச்சுக்கு அனுப்பவேண்டும்;

ஒவ்வொரு மூன்றுமாத இறுதியிலும் இது சம்பந்தமான விரிவான விவர அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்; அத்துடன் சேமிக்கப்பட்ட பண விவரமும் தெரிவிக்கப்பட வேண்டும்;

—இப்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (இ-7)

## 2 வருடக் கடன்: மேலும்நிதி பெற முயற்சி

யாழ்: கல்வித்திணைக்கள ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு இருவருட கடன் வழங்க மேலும் நிதி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது:

முதலில் கிடைத்த ஒரு கோடி ரூபாவில் இருந்து கடன் வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன;

கோட்டக்கல்வி அதிகாரிகள் பாதிக்கப்பட்ட விபரங்களை நேரடியாக சேகரித்து பட்டியல் தயாரிக்கும் வேலைகளை மேற்கொண்டுள்ளனர்; (இ-3)

## மரங்களைக் கடத்தினால் லைசென்ஸ் ரத்தாகும்

### படகுக்காரருக்கு எச்சரிக்கை

நெடுந்தீவிலிருந்து மரங்களை சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லும் படகுகளின் லைசென்சுகள் இரத்துச் செய்யப்படுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது;

மரங்கள் கடத்தப்படுவது குறித்து நெடுந்தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், நெடுந்தீவு பதில் உதவி அரசாங்க அதிபர் திரு: வீரசிங்கத்திடம் முறையிட்டிருந்தது:

இதனை அடுத்து உதவி அரசாங்க அதிபர் படகுக்காரரை எச்சரித்தார்; (இ-114)

## 3 மாத பிரசவ லீவு ஆசிரியைகளுக்கு இல்லை

அரசசேவையில் சேர்க்கப்பட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு பிரசவ லீவாக வழங்கப்பட்டுள்ள 3 மாத சம்பளத்துடனான லீவு ஆசிரியைகளுக்கு வழங்கப்படமாட்டாது;

கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு: சிறில் சமகே யினால் வெளியிடப்பட்ட 22/89ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் இது தெரியவந்துள்ளது:

தாபனவிதிக்கோவை 12ஆம் அத்தியாயத்தில் வெளியிடப்பட்டுள்ள 18ஆம் பிரிவான பிரசவ லீவு புதிய விதிகளில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது:

3 மாத கால சம்பளத்துடனான பிரசவலீவு ஆசிரியைகள், தற்காலிக உத்தியோகத்தர், நாட்சம்பள உத்தியோகத்தர் அல்லது சிறுபணியாளர் ஆகியோருக்கு இல்லையென்றும் இவர்களுக்கு 6வார கால சம்பள லீவு மட்டுமே பிரசவ லீவாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது; [இ- 164]

## புனர்வாழ்வு அமைச்சில் நிவாரணம் பெற்றவர்கள் பட்டியல் யாழ். செயலகத்துக்கு

யாழ்ப்பாணம், செப் 8

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவர்களை இழந்து கொழும்பு புனர்வாழ்வு அமைச்சில் நிவாரணம் பெற்ற 400 பேரின் பெயர்ப் பட்டியல் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது:

இந்த நிவாரணம் கொடுப்பனவாக தலைவர்களை அல்லது குடும்பப் பொறுப்பாளரை இழந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது:

காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம், 15 ஆயிரம் என்ற அடிப்படையில் பணம் வழங்கப்பட்டது:

நேரடியாகக் கொழும்பில் வழங்கப்பட்டு வந்த இந்தக் கொடுப்பனவுகள் கடந்த அக்டோபர் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டிருந்தன:

பின்பு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் இக் கொடுப்பனவுகளை வழங்குமாறு பணிக்கப்பட்டனர்:

இதனை அடுத்தே ஏற்கனவே நிவாரணம் பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது: (இ-10)

## 17 வீடுகள்

தாளையடி, செப்: 8

வடமராட்சி கிழக்கில் இருந்து இந்தியாவிற்கு அகதிகளாக சென்று திரும்பியவர்களுக்கு ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் 17 வீடுகளை கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது:

இவ் வீடுகள் ஒவ்வொன்றும் 15 ஆயிரம் ரூபா செலவில் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன; (இ- 144)

## சமய அரங்கில்

## முல்லைத்தீவில் வருடாந்த மகோற்சவம்

முல்லைத்தீவு, செப்: 8

முல்லைத்தீவின் சரித்திரப் பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது:

நல்லூரைச் சேர்ந்த சிவஸ்ரீ சாம் கணேசக்குருக்கள் கொடியேற்றி வைத்தார்:

11ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும்12 ஆம்திகதிவேட்டைத்திருவிழாவும்13ஆம்திகதி சப்பறத்திருவிழாவும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும 15 ஆம் திகதி தீர்த்தமும் நடைபெறும்: (இ- 92)

## கொக்குவில் மஞ்சவனப்பதி உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 8

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது:

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவிருக்கிறது: (-3)

## நாதவாஹினி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்: 8

யாழ்: பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவின் கவின்கலை மன்றத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நாதவாஹினி நூல் வெளியீட்டு விழா நடைபெற இருக்கிறது.

மன்றத்தின் தலைவி செல்வி மதிமாலா அமிர்தநாயகம் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்;

உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மலரை வெளியிட்டு வைப்பார்; (இ-3)

## வாசகர் திருமுகம்

### வல்லிவெட்டியில் ஒரு தபாற்பெட்டி

பழுதடைந்த நிலையில் தபாற்பெட்டியொன்று, வல்வெட்டி தர்மகுலசிங்க சனசமூக நிலையத்துக்கு அருகே அக் கிராம மக்களால் பெரிதும் சிரமப்பட்டு, பாவனைக்கு உட்பட்டு வருகின்றது:

இப் பெட்டியை மாற்ற வேண்டும் என்ற அதனுடன் சம்பந்தப்பட்டவர்களை கேட்ட போது "மேலதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளுங்கள்" என்று சொல்லி கை கழுவி விட்டார்கள்:

இப்பெட்டி ஏறக்குறைய இருபத்தைந்து வருடகாலங்களுக்கு மேலாக, இக் கிராமத்து மக்களால் பாவிக்கப்பட்டும் பேணப்பட்டும் வந்ததாகும்: ஆனால் தற்போது இப்பெட்டி பழுதடைந்ததன் காரணமாக பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் உள்ளது:

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

ஆர். மீரா,
வல்வெட்டி.

### உண்மையான கிறிஸ்தவர்

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற தலைப்புடன், 24-8-1989 உதயனில், வல்வெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத் தேர்த்திருவிழா சிறப்பிதழில் வெளியான அறிக்கை குறித்து எடுத்துக் கொள்வதாவது:

தெய்வ நம்பிக்கை மிகுந்த, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்த உண்மைக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்த சமயத்தைத் தவிர வேறு எந்த ஒரு மதத்தையும் தழுவ முயற்சி மேற்கொள்ள மாட்டார்கள்: அப்படியானவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களாய் இருப்பர்:

உண்மையான தெய்வ நம்பிக்கை மிகுந்த குருநகர் கிராமத்துக் கிறிஸ்தவர்கள் போலிக் கிறிஸ்தவனை ஒரு பொழுதும் பின்பற்றி இருக்க மாட்டார்கள்: போலிக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களே போலிக் கிறிஸ்தவனைப் பின்பற்றி இருப்பார்கள்;

பெ. கி. நேசன்

20, பீச்ரோட்.
குருநகர்;

# சுவாமி சிவானந்தரின் சிந்தனைகள்

மிருதுவாகப்பேசு, இனிமையாகப் பேசு, சுருக்கமாகப் பேசு, மெய்யே பேசு, அன்பாகப் பேசு,மௌனம் கடைப்பிடி. எச்சரிக்கையுடன் சிந்தித்துப் பிறகே பேசு:

ஏழைக்குதவு: நோயாளிகளுக்கும் ஏழைகளுக்கும் தொண்டுசெய்; அன்புடனும் சிரத்தையுடனும் தொண்டு செய்; தொண்டே வழிபாடாகும்; இதுவே மேலான நெறி; ஓர் சாரணனாக மாறு; முதலுதவியைக் கற்றுக்கொள்;

பிரார்த்தனை செய்: உள்ளத்தே நினை: நாள்தோறும் இறைவனின் நாமங்களைச் சொல்; அன்போடும் தெய்வீக உணர்வோடும், ஒருமை மனதுடனும் வேண்டு: தாய்மை, அறிவு, பக்தி இவைகளை அருளும்படி ஆண்டவனை வேண்டு. ஸ்ரீராம்-ஓம் நமோ நாராயணாய - இயேசு - ஓம் நமோ பகவதே வாஸுதேவாய - அல்லா - ஓம் நமசிவாய என்று இவ்வாறாக நாள்தோறும் இறைவனின் நாமங்களைப் பன்முறை சொல்; உன் பள்ளிப் பாடங்களுடனே கீதை உபநிடதங்கள், குரான், (முகமதிய வேதம்) பைபிள் (கிறிஸ்தவ வேதம்) இவற்றை நாள்தோறும் கற்றுவா; கற்றறிந்தவைகளை வாழ்க்கையில் கடைப்பிடி அப்போதுதான் நீ முன்னேறுவாய்;

எல்லா மதங்களையும், மதக் கோட்பாடுகளையும், மத நம்பிக்கைகளையும் கண்ணியப்படுத்து; (அவைகளுக்கு மரியாதை காட்டு) எல்லா மத ஞானிகளையும் மரியாதை செய்: எல்லா மதங்களும் நம்மை இறைவனிடமே அழைத்துச் செல்கின்றன;

இன்று 8 ஆம் திகதி சுவாமி சிவானந்தரின் பிறந்த நாள்; அதனை ஒட்டி இச் சிந்தனைத் தொகுப்பு வெளியிடப்படுகிறது;

இந்த விஷயத்தை நன்கு நினைவில் வைத்துக்கொள்.

எல்லோரையும் நேசி; எல்லோருக்கும் பணிவிடை செய்; அன்பாயிரு; உண்மையாயிரு; தூய்மையாயிரு; கருணையுடன் இரு; பெருந்தன்மையோடிரு; மிருகங்களிடம் அன்பாயிரு; பிறரது உணர்ச்சிகளைப் புண்படுத்தாதே. எல்லாவற்றிலும் இறைவனைக் காண்; பெற்றோர், பெரியோர், ஆசிரியர் இவர்களுக்கு அடங்கி நட; உண்மையில் நீ 'பிறப்பு இறப்பு நோய், அழிவற்ற ஆத்மாவாக இருக்கிறாய்; நீயே எல்லா இன்பமும் ஞானமும் அறிவும் ஆவாய்' இதை உணர்; இதை அனுபவி; இதுவே தெய்வீக வாழ்வு;

### இறைவனின் பெருமை

கடவுள் அன்பாயிருக்கிறார் அவரே சத்தியமும், சாந்தியும் பேரின்பமும், ஒளியும், சக்தியும் ஞானமுமாக விளங்குகின்றார்; அவர் உன் உள்ளத்தே வசிக்கின்றார்; அவரை அறிந்து விடுதலை அடைவாயாக!

என் அருமைச் சுடரொளிகளே! இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக:

நல்லதையே நினையுங்கள்,
நல்லதையே பேசுங்கள்
நல்லதையே செய்யுங்கள்;

★

## கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணத்து தவில் வித்துவான் என். ஆர். சின்னராசாவின் தவில் கச்சேரி நேற்று முன்தினம் இரவு இந்திய வானொலியில் ஒலிபரப்பான நிகழ்ச்சியில் இடம்பெற்றது:

உலக தவில்மேதை அளவை தெட்சணாமூர்த்திக்குப் பின் என். ஆர். சின்னராசாதான் ஈழத்தில் உயர் வித்துவானாகக் கருதப்பட்டு வருகிறார். தற்போது தமிழகத்தில் வாழும் இவரது தவில் கச்சேரியை பல கால இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் ஈழமக்கள் கேட்கக் கூடியதாக இருந்தது:

ஆனால் இது தொடர்பான வானொலி அறிவிப்பில் யாழ்ப்பாணத்து என். ஆர். சின்னராசா என்று கூறப்படாததை இந்த தவில் கச்சேரியை ரசித்த அன்பர் ஒருவர் கவலையுடன் சுட்டிக்காட்டுகிறார்; இதில் ஏதாவது மர்மம் இருக்குமோ என்று கேள்வி எழுப்புகிறார்:

தமிழகத்தில் வாழும் ஈழத்துக் கலைஞர்கள் எல்லோரது நிலைமையும் இதுதான் போலும்!

மட்டக்களப்பைச் சேர்ந்த பாலு மகேந்திரா, சண்டிலிப்பாயைச் சேர்ந்த வி. சி. குகநாதன் தற்போது தமிழகத்தில் புகழ் பரப்பி வரும் ஈழத்துக் கலைஞர்கள்:

ஆனால் இவர்கள் ஈழ நாட்டவர்கள் என்பது தமிழகத்தில் பலருக்குத் தெரியாதாம்.

தமிழகத்தில் ஈழ நாட்டவர்கள் மறைக்கப்படுகின்றனரா? அல்லது மறைந்து வாழ்கின்றனரா?

— இதுதான் இன்று எழும் கேள்வி:

செய்தி வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகர் அடைக்கலமாதா ஆலய வருடாந்த நவநாள் உற்சவ சிறப்பு மலர்


[ 08 - 09 - 1989 ]

# 18 ஆம் நூற்றுண்டிலே ஆசனக்கோவிலாக இருந்த ஆலயம்

யாழ்ப்பாண நகரின் மத்தியில் உள்ள ஓர் கத்தோலிக்க ஆலயம் என்றல் அது யாழ்; அடைக்கலநாயகி ஆலயமே; யாழ் ஆஸ்பத்திரி, பெரிய கடை பஸ் நிலையம், புகையிரத நிலையம் முதலியவற்றிற்குச் செல்கின்றவர்களுக்கு அணுகி வேண்டுதல் செய்யக்கூடிய ஆலயம் அதுவே;

1848லும் அதன் பின்னர் சில காலங்களுக்கும் அது யாழ் ஆசனக் கோவிலாக இருந்ததில் வியப்பில்லை: 1783இல் தலைசிறந்த கோவைக் குருவான லோபோவுடன் அதைத் தொடர்புபடுத்தி 1802இல் அவர் இறந்த பொழுது அங்கேயே புதைக்கப்பட்ட சான்றுகளும் உண்டு; ஒரு காலத்தில் மடுவண் போன்று புதுமையுள்ளதாக அவர் கல்லறையின் மண் விசுவாசிகளால் பாவிக்கப்பட்டதாக சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்; கோவிலின் முன்பக்கமே 1894இல் கட்டப்பட்டதாயினும் அதன் பழைய சுருபங்கள் போர்த்துக்கேயர் காலத்தவையாகவே இருக்கலாம்;

தாய்க்கு வீரமாமுனிவரால் சூட்டப்பட்ட திருக்காவலூர் கலம்பக புகழ் பெற்றதாகும்;



யாழ் நகர் அடைக்கலமாதா ஆலயத்தின் எழில் மிகு தோற்றம்

கத்தோலிக்கத்தின் வரலாற்றில் கிறீஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று மிசனறி அலைகளும் நிரந்தரமாக ஊன்றிவிட முடியாத கிறீஸ்தவத்தை 16 ஆம் நூற்றுண்டு பிரான்சிஸ்கன் சிரேஷ்ட சபை மிசனறிகள் நிரந்தரமாகவும் ஊன்றிவிட்டன; வரலாறு கோவா

ராயர் கீழ் தமிழ் செய்யுள் இலக்கியங்களைக் கற்று ஏலாக்குறிச்சியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் வாழ்ந்த புரட்டஸ்தாந்து டேனிஸ் சபையாரின் போதகங்களைக் கண்டு கலக்கமுற்ற கத்தோலிக்கர்களுக்கு படைக்கலமாக அடைக்கல அன்னையை திருக்காவலூரில் பதிகம் பாடினர்; அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா; அடைக்கலமாலை, திருக்காவலூர்க் கலம்பகம் ஆகியவற்றைப் பாடிப் பரவினர்;

அதன்பிறகு நல்ல மழை பெய்ததும், நாடு செழித்து வளம் பெருகியதும், மதம் மாறிய கூட்டம் மறுபடியும் வந்து சேர்ந்ததும், மக்கள் பக்தியில் முன்னேறியதும் இங்கு வாழ்ந்த கத்தோலிக்கர்களுக்கு ஓர் உந்து கோலாக இருந்திருக்க வேண்டும்; இவ்விருந்த தேவதாயின் தலம் அடைக்கலநாயகி ஆலயமாகியதில் வியப்பில்லை;

"அடைக்கல அன்னையை நாடி, அவளது புகழைப்பாடி வணங்குகின்ற மாந்தரெல்லாம் தம் துன்பங்கள் நீங்கப் பெற்று உலகத்தவருள் மாசற்றவராகவும், ஒப்பற்றவராகவும் வாழ்வதுடன் கிறீஸ்துவின் ஒளியாய் விளங்கி விண்ணக இன்பத்தைப் பெறுவார்கள்" என்ற கருத்துடைய பாடல் ஒன்றை வீரமாமுனிவர் தம்முடைய திருக்காவலூர்க் கலம்பகத்தில் பாடி இருப்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறோம்;

"பாடிப் புகழ்ந்து படர்
காவலூர் நங்கை
நாடி வணங்கு
நரரெல்லாம் - கேடிலரே
மண்ணவருள் மாசிலராய்
வாழ்ந்தி வண்மற்
- றொப்பிலராய்
விண்ணவருள் வீற்
றிருந்தொப் பார்"

## சுவாமி யோசெப் ஜெயசீலன்

போர்த்துக்கேயர் காலத்து வரலாற்று ஆசிரியர்களான பௌலோ டேற்றினிடாலும் குறிப்பிடுகிற யாழ் கோட்டைக்கு அருகிலுள்ள தேவதாயின் ஆலயம் இதுவாக இருக்கக் கூடும்; அடைக்கலநாயகி என்றபெயர் கோவைக் காலத்துக் குருக்களின் பெயர் மாற்றமாக இருக்கலாம். அடைக்கலநாயகி என்ற நாமம் தேவ

தொடங்கி நாகசாக்கிவரை தேவமாதாவின் பக்தியோடு ஊன்றி வளர்க்கப்பட்ட ஒரு வரலாறுகும்;

இதற்கு இலக்கிய வடிவம் தந்தவர் பல்கலைச் செல்வராகிய வீரமாமுனிவராகும்; 1710இல் கோவா வந்தடைந்து 1711இல் மதுரை மணிமண்டலத்துள் இவர் பணியேற்கையில் பழனி சுப்பிரதீபக் கவி

## பங்குத்தந்தையின் ஆசியுரை

யாழ்-நகர் புனித அடைக்கலநாயகியின் திருவிழாவைக் கொண்டாடும் பங்கு மக்களின் மகிழ்ச்சியுடன்; எனது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்;

இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில் தங்கள் விசுவாசத்தாலும், விடாமுயற்சியாலும் தமது அடைக்கல அன்னையின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்வதை முன்னிட்டு அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

யாழ்-நகர கிறிஸ்தவ மக்கள் இறை அன்பைப் பெற்ற அன்னை அடைக்கலமாதாவின் வழியாக தமது வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணிக்க கிறிஸ்துவுக்கு உண்மைச் சாட்சிகளாக வாழ ஆசி கூறுகிறேன்;

வணபிதா பிலிப் பொன்னையா
பங்குத் தந்தை
புனித அடைக்கல மாதா ஆலயம்
(ஓ.எல்.ஆர்.)
யாழ்ப்பாணம்;

மலர் ஏற்பாடு
'உதயன்' குருநகர்
செய்தியாளர்;
த. பரமலிங்கம்.

பிறின்சி வோச் வேக்ஸ்
115, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

நாட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் தோன்ற கூட்டில் இன்று பவனி வந்தருள்க!
* அழகுக்கு அழகு செய்யும்
* அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு
★ சோபனு ஜுவலறி ★
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அடைக்கலம்! அடைக்கலம்! அடைக்கலமென்று அவனியில் அலைகின்ற எம்மைக் காரும்மா!
* கம்பியூட்டர் கல்வி ஆரம்பமாகிவிட்டன *
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd Cross Street, Jaffna.

யாழ்நகரின் அடைக்கலம் காப்பவளே!
தாழ்வுற்ற எம் வாழ்வு மேம்பட வாருமம்மா!
● நவநாகரிக ஆடை அணிகள்
● சிறுவர் சிறுமிகளுக்கான றெடிமேட்
சேட்டிங் சூட்டிங் வகைகளுக்கு
எம்மை நாடுங்கள்
★ லக்கி ரெக்ஸ்ரைல் ★
182 நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்

அடைக்கல மாதா அடைக்கலம் தாரும்
அன்னை மரியே எம்மைக் காரும்!
* எமது வாடிக்கையாளர்களுக்கு
* முக்கிய அறிவித்தல் *
மானிப்பாய் வீதி, 41/1, இலக்கத்தில் இருந்த எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்;
நியூ யோகா சைக்கிள் வேக்ஸ்
(அடைக்கல மாதா கோவிலடி)
163, ஆஸ்பத்திரி வீதி யாழ்பபாணம்.

★ தேவி சலூன் ★
45A, மவுண்கார்மல் வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்

பெத்த வயிறு பத்தி எரிய யூதர்கள் அன்று
பெத்தல சேமில் புத்தியை விட்டு செய்ததுபோல
மெத்த மெத்த மகிழ்ந்தது இங்கே மேதினிகாரும்!
அந்தியகால சேவைக்கு உங்கள் அருகில்
இருக்கும் அன்பன்
★ நேசன்ஸ் ★
[வேம்படிச் சந்தி]
563, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்,
NESON'S
Funeral Undertakers
(Vembadi Junction)
No. 563 Hospital Road JAFFNA.

அன்னை மரியே அடைக்கல நாயகியே
முன்னைய எமது நாட்டு நிலை தோன்ற
பிரார்த்திக்கின்றோம்!
● அந்தியகால சேவையில் முந்தி நிற்பவர் ●
பிறைற் ஹவுஸ்
(புனித யாகப்பர் ஆலய மருங்கில்)
210, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.

கல்லறை ஆண்டவர் சொல்லொணுத் துன்பத்தில்
அல்லலும் பட்டதாம் அந்நேரம்
அடைக்கல மடைந்ததையே!
ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்;
★ ஹோட்டல் ஞானம்ஸ் ★
299, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,

யாழ் நகரின் அடைக்கலம் தருபவளே!
ஆழ்துயில் நீக்கியெமைக் காப்பவளே!
குளிர்சாதனப் பெட்டி
எயர்கொண்டிசன்
றேடியோ ரி.வி. டெக்
மின்சார உபகரணங்களை
அனைத்தும் பழுதுபார்ப்பவர்களும் உதிரிப்பாக விற்பனையாளர்களும்
UNITE SERVICE
யுனைற் சேவிஸ்
165, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

அன்னை மரியே எம்மைக் காரும்!
திருமண வைபவ பூச்செண்டுகள், தலைமுடி.
வேலை, தலைச்சோடனை, பூச்சரம்
முதலியன வாடகைக்கும்
பூக்களிலான வேலைகள் ஒடருக்கும்
செய்து கொள்ளவும் நாடுங்கள்;
மாதா [F] பிளோறிஸ்ற்
(காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக)
634 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

அன்னை அடைக்கல நாயகியின் அருள் சுரக்கும்
பாதாரவிந்தங்களை போற்றுகின்றோம்!
அச்சகத்திற்குத் தேவையான காகிதாதிகளையும்,
Globe, Grafo மை வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
★
Globe Industries
173, 4th Cross Street, JAFFNA

எங்கள் அன்னையர் இன்றுதிர்க்கும் விழி நீர்
தங்களின் அன்றைய கல்வாரி நிலையோ?
* சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன *
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane, Jaffna.

எண்பத்தேழாம் ஆண்டு அலைபட்ட மக்கள்
அடைக்கலம் பெற்ற விதல நாயகியே!
ரி.வி. டெக், கசற் றெக்கோடர், சுவர் மணிக்கூடுகள்
பாக்ஸ், அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்
மரியநாயகம் ஸ்ரோர்ஸ்
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்:

யாழ்நகரில் அடைக்கல அன்னையின்
திருத்தேர் பவனி சிறப்புற யாசிக்கும்!
★ ஈ-சன்ஸ் ★
(டவுனும்ஸ் கட்டடம்)
148 பிரதான வீதி யாழ்ப்பாணம்

அன்னை அடைக்கல நாயகியின் அருள் சுரக்கும் பாதார விந்தங்களைப் போற்றுகின்றோம்!
NORTH LANKA MEDICAL COLLEGE
164, 4th Cross Street, JAFFNA.

அன்னை மரியே எம்மைக் காரும்!
CHRIS MARKETING ORGANISATION
380, Hospital Road, Station Junction, Jaffna.
★ LEADERS in Distribution Service with a large dealer net - work, representing Caves Marketing Services Ltd. Colombo;
★ LEADERS in Quick Service photoprinting representing Hayleys Photoprint (Pvt) Ltd. Colombo;
★ LEADERS in Video Vision Service with a large club - membership;

நான்காம் குறுக்கு வீதியுள் வாசல்
மூன்றும் குறுக்கு வீதியும் அயலில்
ஆஸ்பத்திரி வீதியோ ஆலயச் சிரசில்
என்றமைந்த யாழ்,
அடைக்கல அன்னையே!
தரமான மூக்குக் கண்ணுடி
வழங்குபவர்

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணுடிகளைச் சரியாகக் கொடுப்பவர்
எஸ். எம். பெர்னுன்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கிக்கு அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இஸ்ரவேலின் அடக்குமுறை தொடருமானால்

# பலஸ்தீனியர்களின் அமைதி ஆர்ப்பாட்டம்

# ஆயுதப்போராட்டமாக மாறும் என அறிவிப்பு

## பெல்கிறேடில் வைத்து அரபாத் எச்சரிக்கை

பெல்கிறேட், செப் 7
அணிசேரா இயக்க உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பெல்கிறேட் சென்றுள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் அங்கு செய்தியாளர்மாநாடு ஒன்றை நடத்தினர்.

அவர் அதில் சொன்னதாவது:
மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதற்கு மேற்குலக நாடுகள் இஸ்ரவேல் மீது நிர்ப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.
அதற்கு இஸ்ரவேல் இணக்கம் தெரிவிக்காமல் அரபு மக்களின் அமைதிப் போராட்டத்தை அடக்க இராணுவ அடக்குமுறைகளை தொடருமானால் தற்போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நடத்தப்படும் அமைதிப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற நேரிடும் என்று எச்சரிக்க விரும்புகின்றேன்.
பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டியது அவசியம்.
இந்த மாநாடு அடுத்த ஆண்டில் நடைபெறும் என்று நம்புகின்றேன்.
இந்த விஷயத்தில் ஐ.நா. நிறுவனம் தீவிரமாகச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானம் அணிசேரா இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது மகிழ்ச்சி தருகிறது.
இப்படி யாசிர் அரபாத் சொன்னார். (எ)

## உறவு ஆரம்பம்

அபுதாபி, செப் 7
ஐக்கிய அரபு எமிறேற்சு நாடு போலந்துடன் ராஜரிக உறவுகளை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. [எ]

## மார்க்கோஸ் உடல் நிலை

ஹொனுலுலு, செப் 7
பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் உடல் நிலை மிக மோசமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. [எ]

## ஐவர் கைது

டோக்கியோ, செப் 7
ஜப்பானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு யுரேனியம் கனிப்பொருளை விற்க முயற்சித்த ஐந்து ஜப்பானியர்களை டோக்கியோ பொலீஸார் கைது செய்தனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. [எ]

## கம்பியூட்டர் செய்த குறும்பு

பாரிஸ், செப்டெம்பர் 7
ஒரு கம்பியூட்டர் செய்த தவறினால் 41 ஆயிரம் பேர் 'கொலைகாரர்களாகவும் பணம் பறிப்பவர்களாக மாறினர்.
நடந்தது இதுதான்:
போக்குவரத்துச் சட்ட விதிகளை மீறிய 41 ஆயிரம் பேருக்கு அபராதம் விதிக்கப்படவேண்டியிருந்தது; அது பற்றிய விவரங்கள் கம்பியூட்டருக்குக் கொடுக்கப்பட்டன;
கம்பியூட்டரோ சகலருக்கும் அபராதம் செலுத்தக் கோரும் கடிதங்களைத் தயாரித்து அனுப்பியது.
ஆனால் அக்கடிதங்களில் போக்குவரத்துக் குற்றங்களைப் புரிந்தது... என்பதற்குப் பதில் கொலைசெய்தது, பெண்களை மானபங்கம் செய்தது, மோசடி செய்தது ஆகிய குற்றங்களைப் புரிந்ததாக... என்று அச்சடிக்கப்பட்டிருந்தது
கம்பியூட்டர் செய்த இக்குறும்பு காரணமாக, பாரிஸ் நகர போக்குவரத்துப் பொலீஸார் 41 ஆயிரம் மன்னிப்புக் கோரும் கடிதங்களை சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைக்க வேண்டியதாயிற்று. (எ)

★ அ. தி. மு. க. விவகாரம்

# சிரேஷ்ட இணைப்பொதுச்செயலர் நியமனம்; வீரப்பன் முன்னிலையில் ஜெய. விளக்கம்!

சென்னை, செப் 7
அ. தி. மு. க சிரேஷ்ட இணைப்பொதுச் செயலாளராக எஸ். டி. சோமசுந்தரத்துக்கு பதவி உயர்வு ஏன் வழங்கினேன்?
இக்கேள்விக்கு செல்வி ஜெயலலிதா கடந்த செவ்வாய்க்கிழமை பதிலளித்தார்.
செய்தியாளரை அன்று செல்வி ஜெயலலிதா சந்தித்தார். அப்போது அவர் சொன்னதாவது;
இப்பதவி உயர்வு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. சில நிர்வாக வசதிகளுக்காகவே திரு. சோமசுந்தரம் பதவி உயர்த்தப்பட்டார் அதையே நாம் செய்தோம்.
அதனை பத்திரிகைகள் ஏன் பெரிதுபடுத்த வேண்டும்?
செல்வி ஜெயலலிதா இப்படிச் சொன்னபோது அவரின் அருகில் இணைப்பொதுச் செயலாளர் இராமா வீரப்பனும் சிரேஷ்ட இணைப் பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரமும் அமர்ந்து இருந்தனர்.
கேள்வி: திரு. சோமசுந்தரத்திற்கு புதிய பதவி கொடுத்தது, கட்சிக்குள் குழப்ப நிலையை ஏற்படுத்தி இருப்பதாகக் கூறப்படுகிறதே!
ஜெயலலிதா: அப்படி ஒரு குழப்பமும் கட்சிக்குள் இல்லை பத்திரிகையாளராகிய நீங்கள் தான் எமது கட்சி நடவடிக்கைகளை பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கிறீர்கள். நாம் செய்யும் ஒவ்வொன்றும் வெளியில் பெரிதாகக் காட்டப்படுகிறது. (எ)

# ராஜீவால் நாட்டுக்கு ஆபத்து; ஜனாதிபதிக்கு முறையீடு!

பெங்களூர் செப். 7
பிரதமர் ராஜீவ் காந்தி நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானவராக மாறிவிட்டார்.
ஜனாதிபதி வெங்கடராமனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஜனதாதள் தலைவர்களில் ஒருவரான திரு. மது தண்டவதே முன்கண்டவாறு தெரிவித்து உள்ளார்.
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜியின் குற்றச்சாட்டின் பின்னர் பிரதமர் பதவியைத் தொடர்ந்து வகிக்கும் தார்மீக உரிமை திரு. காந்திக்கு கிடையாது என்றும் திரு மது தண்டவதே கடிதத்தில் கூறியிருக்கிறார். (எ)

# ஒரே சூலில் மூன்று குழந்தை, சோதனைக் குழாய் முறை மூலம்!

## டுபாயில் பிரசவம்

டுபாய், செப். 7
ஐக்கிய அரபுக்குடியரசில் சோதனைக்குழந்தை பிரசவம் முதன் முறையாக இடம் பெற்றது
ஒரே சூலில் மூன்று குழந்தைகளை சோதனைக் குழாய் முறை மூலம் ஈரானியப்பெண் ஒருத்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை டுபாய் ஆஸ்பத்தியில் பிரசவித்தார்.
மூன்றும் பெண் குழந்தைகள். சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகள் பிறந்தன.
லண்டனில் உள்ள எகிப்து டாக்டர் ஒருவர் இச்செயற்கைக் கருத்தரிப்பைச் செய்து வைத்தார்.
சோதனைக்குழாய் முறை மூலம் ஒரே சூலில் மூன்று குழந்தைகள் பிறந்தமை உலகில் இது மூன்றாவது தடவையாகும். (எ)

ஆப்கன் கெரில்லாக்களுக்கு

# மீண்டும் ஆயுதம் வழங்குவதை அமெரிக்கா ஆரம்பித்தது!

ஆப்கன் கெரில்லாத் தளபதிகளுக்கு நேரடியாக ஆயுதம் வழங்குவதை அமெரிக்கா ஆரம்பித்துவிட்டதாக மேற்கு நாடுகளின் ராஜதந்திர வட்டாரங்களை ஆதாரங்காட்டி பாகிஸ்தான் நாளிதழ் 'த நேஷன்' அறிவித்துள்ளது;
கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் ஆகஸ்ட் வரை ஆப்கன் கெரில்லாக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்கா நிறுத்திவைத்துள்ளது.
முன்னர் பாகிஸ்தானில் நிலைகொண்டுள்ள ஆப்கன் கெரில்லாக்குழுக்களின் தலைவர்கள் ஊடாகத்தான் ஆயுதங்களை அமெரிக்கா வழங்கி வந்தது.
இப்போது ஆப்கனில் நிலைகொண்டு போராடும் கெரில்லாக்களின் தளபதிகளுக்கு நேரடியாகவே ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.
1980 முதல் 1988 இல் ஆப்கன் உடன்பாடு ஏற்படும்வரை ஆப்கன் கெரில்லாக்களுக்கு 80 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்கள் வழங்கப்பட்டன. (எ)

# அலாஸ்காவில் தாயகம் அமைக்குக; யூதர்களுக்கு கடாபி ஆலோசனை!

பெல்கிறேட், செப் 7
யூதர்களுக்கு தாயகம் வேண்டுமா? —
இந்தக் கேள்விக்கு லிபியா ஜனாதிபதி கேர்ணல் மும்மார் கடாபி பதிலளித்தார்.
அணிசேரா இயக்க மாநாட்டில் கேர்ணல் கடாபி பேசினார்
அப்போது அவர் சொன்னதாவது:
தாயகம் ஒன்றை அமைக்க யூதர்கள் விரும்பினால் அவர்கள் அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா மாநிலத்திற்குச் செல்லலாம்; அல்லது சோவியத் யூனியனில் உள்ள பால்டிக் குடியரசுகளுக்கு செல்லலாம்.
சோவியத் யூனியனில் யூதர்கள் வெளியேறி பலஸ்தீனம் செல்ல அமெரிக்கா தூண்டி வருகிறது.
பலஸ்தீனத்தில் யூத நாடு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வதானால் நாம் உலக வரைபடத்தையே மாற்றி அமைப்போம்.
முஸ்லிம்களாகிய நாம் நியூயார்க்கில் வாழ விரும்புகிறோம் ஏன் முடியாது? பலஸ்தீனத்தை யூதர்கள் விரும்பலாம் என்றால் நாம் ஏன் நியூயோர்க்கை விரும்ப முடியாது?
யூதர்களுக்கு அனுதாபமாக அமெரிக்கா இருக்கிறது. நாட்டை விட்டு வெளியேற யூதர்களுக்கு சோவியத் யூனியன் அனுமதி வழங்குகிறது ஆகவே அலாஸ்காவை அவர்கள் யூதர்களுக்கு கொடுக்கலாமே!
இப்படி கேர்ணல் கடாபி தனது 90 நிமிட உரையில் தெரிவித்தார். (எ)


# கேள்விப்பத்திர அறிவித்தல்

## நீர்ப்பாசனத் திணைக்களம்
யாழ்ப்பாணப் பிரிவு

நீர்ப்பாசனத் திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவில் உள்ள நாகர்கோவில் கரியாலை — பல்லவராயன்கட்டு வீதி மூன்றும், நான்காம் மைல் திருத்த வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 142,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கிளிநொச்சி நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விச் சபைத் தலைவரினால் 26 - 09 - 89 ஆம் திகதி காலை 10. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்;

இவ் வேலைக்கான கேள்விப்பத்திரங்களை 8 - 09 - 89 தொடக்கம் 22 - 09 89 காலை 10. 00 மணிவரை பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்;

இவ் வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்;

எந்திரி க. விஸ்வலிங்கம்.
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணப் பிரிவு;

நீர்ப்பாசன அலுவலகம்,
நாவற்குழி, கைதடி.
06 . 09 . 1989 (சி/3322)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடங்கள்

இப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து செப்ரெம்பர் 29 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:
(1) தொழில் நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி'
(2) விளையாட்டு மைதானப் பராமரிப்பாளர் தரம் 11

சம்பள அளவுத் திட்டம்:
(1) தொழில் நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி' ரூபா 2085 - 10x40; 7x50 - 2835/- மாதமொன்றிற்கு
(2) விளையாட்டு மைதானப் பராமரிப்பாளர் தரம் 11 ரூபா 1865- 11 x 40-2305/- மாதமொன்றிற்கு

தகைமைகள்:
(1) தொழில் நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி' இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 திறமைச் சித்திகளுடன். க. பொ. த (சா. த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் விஞ்ஞானம் கணிதம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்

வயது:
40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு:
உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு:
(அ) தொழில் நுட்பவலர் சேவை பிரமாணப் முதலில் மாதம் ஒன்றிற்கு ரூபா 1975/- நிலையான சம்பளத்தில் மூன்று வருட காலத்திற்கு பயிற்சி பெறும் தொழில் நுட்பவலர்' என்ற அடிப்படையில் அமர்த்தப்படும்.
(ஆ) தொழில் நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி' (கிளிநொச்சி) பதவிக்கு அண்மையில் விண்ணப்பம் செய்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவ் விண்ணப்பங்களும் இப்பதவிக்கு கவனிக்கப்படும்.

(2) விளையாட்டு மைதானப் பராமரிப்பாளர் தரம் 11

தகைமைகள்.
(அ) எழுதுவதிலும் வாசிப்பதிலும் ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும்
(ஆ) கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், பட்மின்ரன், ரெனிஸ், ஹொக்கி, ரக்பி முதலிய பல்வேறு விளையாட்டுக்களுக்குவிளையாட்டு மைதானத்தை ஆயத்தம்செய்வதிலும், பராமரிப்பதிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
(இ) எல்லா வகையான விளையாட்டு உபகரணங்களைப் பற்றிய அறிவும் அவற்றைப் பராமரிக்கக் கூடிய திறமையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) விளையாட்டு மைதானங்களைப் பராமரிப்பதில் ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாவது அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்,

வயது: 40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு:
உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனக் கிளையில் விண்ணப்ப படிவங்களை நேரிலும் 23 x 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரையொட்டப்பெற்ற கடித உறையை அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நிறுவனங்களிலுள்ள விண்ணப்பதாரி, அவரின் நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்
மேற்குறிப்பிட்டவாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள், குறித்த திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

பதிவாளர்.
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
28 08 1989 [சி/3633]



உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்:
நிகழும் சுக்கில வருடம் ஆவணித் திங்கள் 25 ஆம் நாள் (10 - 09 - 89) ஞாயிற்றுக்கிழமை காலை 7 00 மணி முதல் 8 00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது சகோதரரும் யசோதாலிங்கம் தம்பதிகளின் (பிரதம சிருப்பர்) புதல்வருமாகிய

**ஜெயந்திக்குமார்**

(இரசாயினி [CHEMIST] சீமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்களுக்கும்

திரு. திருமதி முருகேசு [டாக்டர்] தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி

**பவானி**

அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு கே. கே. எஸ். வீதி செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

★ இவ் வண்ணம் தங்கள் அன்புள்ள ★

திரு நகராஜ் தம்பதிகள்
திரு. ஸ்ரீபத்மநாதன் தம்பதிகள்
திரு விஜயகுமார் தம்பதிகள்
"மலரகம்"
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

டாக்டர் ஆ. முருகேசுவும் பாரியாரும்
கிருபாலன் தம்பதிகள்
(யப்பான் ஜுவலர்ஸ்)
234/4. கே. கே எஸ். வீதி.
(ஸ்ரீலங்கா அச்சக ...)
யாழ்ப்பாணம்.
(1281)



வலி - கிழக்கு தென்பகுதி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி
## 27/2084 இலக்க இசுசூ லொறிக்கு பொடி அடித்தலும், என்ஜின் திருத்தவேலை செய்தலும்

மேற்படி லொறிக்கு என்ஜின் திருத்த வேலைக்கும், பொடி அடித்தலுக்குமான கேள்வி விண்ணப்பங்கள் தனித்தனியே கோரப்படுகின்றன சங்கத் தலைமைக் காரியாலயத்தில் மீளளிக்கப்படும் தொகையாக ரூபா 250/- உம், மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 10/ உம் செலுத்தி உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 19. 09 89 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 00 மணிக்கிடையில் பூர்த்திசெய்து. பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அன்றி நேரிலோ சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றேன்; தங்களால் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், 'என்ஜின் திருத்தம் / பொடியடித்தலுக்கான விண்ணப்பம்' என எழுதப்படல் வேண்டும்.
மேலும் எங்கள் லொறியிலிருந்து கழற்றப்பட்ட பொடி அடித்தலுக்கான சில பொருள்கள் எம்மிடம் உண்டு அவற்றை சங்க வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

நீர்வேலி, பொதுமுகாமையாளர்
1989-09-... (1697)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

08 • 09 • 1989 வெள்ளிக்கிழமை



அண்ணா கோப்பி, மல்லித்தூள்,
மல்லிக் கோப்பி, மாவகைகள்,
ஜீவாகாரம், மிளகாய்த்தூள்
ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்
கொள்ளலாம்.
அண்ணா கோப்பி,
விளம்பர நிலையம்.



அண்ணா கோப்பியின்

வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து
கீழ்க்காணும் பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்:

100g வெற்றுப் பைக்கட்டுக்கள் 10க்கு
அல்லது
50g வெற்றுப் பைக்கட்டுக்கள் 20க்கு
அல்லது
25g வெற்றுப் பைக்கட்டுக்கள் 40க்கு
ஒரு எவர்சில்வர் ரம்ளர்


## பயணிகள் அடையாளக்கார்ட் பறிமுதல்: பஸ்களும் தீக்கிரை

அம்பாறை மாவட்டத்தில் லெம்பலந்துவை என்னுமிடத்தில் இரண்டு தனியார் பஸ்களில் பயணம் செய்தவர்களிடம் இருந்த தேசிய அடையாளக்கார்ட்டுகளை இனந்தெரியாதோர் பறித்துச் சென்றனர்.

கொழும்பு சென்றுகொண்டிருந்த இந்த பஸ்களைப்புதன் கிழமை காலை இனந்தெரியாதவர் வழிமறித்துத் துப்பாக்கி முனையில் அடையாளக் கார்ட்டுகளைப் பறித்தனர்.

பின்னர் பஸ்களுக்கு அவர்கள் தீவைத்தனர். (ஓ-எ)

## ராஜீவுடன் கை குலுக்கிய ரஞ்சன்!

பெல்கிறேட், செப். 8

பெல்கிறேட்டில் நடந்த அணிசேரா இயக்க மாநாட்டில் பிரதமர் ராஜீவ் காந்தி பேசி முடித்ததும் ஏனைய நாடுகளின் தலைவர்கள் மேடைக்குச் சென்று அவருக்கு கை குலுக்கி தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டனர்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவும் அவர்களில் ஒருவர். (ஓ-எ)

## யாழ். தொலைபேசி சேவையை சீர்செய்ய குழு சென்றது

யாழ் — கொழும்பு நேரடித் தொலைபேசி சேவையைச் சீராக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக தொழில்நுட்பவியலாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அனுராதபுரம் சென்றுள்ளது.

யாழ் — அனுராதபுரம் தொலைத்தொடர்பு நிலையங்களுக்கிடையே ஏற்படும் பழுது காரணமாகவே தொலைபேசிச் சேவைகள் அடிக்கடி தடைப்படுகின்றன.

யாழ் திணைக்களத்திலிருந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுவிட்டன. ஆயினும் தொடர்ந்து சில இணைப்புகள் திடீர் திடீரென செயலிழந்துவிடுகின்றன.

இதுபற்றி பலமுறை அனுராதபுரத்திலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் முறையிட்ட போதிலும் தகுந்த பயன் கிடைக்கவில்லை.

இதை அடுத்தே இங்கிருந்து குழு ஒன்று அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இரத்தினபுரியில் 10 சடலங்கள்

கொழும்பு, செப் 8

இரத்தினபுரியில் அடையாளம் காணப்படாத பத்துச் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

பொதுமக்கள்பதினொருபேர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

மொத்தத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 28 பேர் தென் பகுதியில் வன்செயல்களில் உயிரிழந்தனர். (ஓ-எ)


## அறிவித்தல்

இப்பொழுது எமது ஸ்தாபனத்தில்
சகல வகையான ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

# ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(2079)


## இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் பாரிஸில்

### பிரதமர் தலைமையில் குழு செல்லும்

கொழும்பு, செப். 8

பாரிஸில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாக உள்ளது.

இதில் கலந்துகொள்ளவிருக்கும் இலங்கைக் குழுவுக்கு பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க தலைமை வகிப்பார்.

அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், மத்திய வங்கி ஆளுநர் திரு. நெவில்கருணாதிலக, வெளிநாட்டு வளங்கள் பிரிவு இயக்குநர் ஜனப் ஆக்கில் முகமட் ஆகியோர் குழுவில் இடம்பெறும் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். (ஓ-எ)

## காயமுற்றனர்

யாழ்ப்பாணம், செப். 8

நாவாந்துறை வசந்தபுரம் பகுதியில் பெண்மணி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு ஆளானார்.

காயமடைந்தவர் இதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் மகேஸ்வரி (வயது 24) என்பவராவார்.

இதே வேளை நேற்று நண்பகல் 3 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் உள்ள சாலை ஒன்றில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமுற்றார். காயமடைந்தவர் கப்பையா பாலச்சந்திரன் (வயது 22) என்பவராவார். (அ-9)


# மகாபொல கொடுப்பனவு

## 1ஆம், 2ஆம் தவணைப்பணம் யூன், யூலை 1989

முதலாம் வருட பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் | 11- 09- 1989 மு. ப. 9 00—12.00 மணிவரை |
| வியாபார நிர்வாகம் | 12- 09- 1989 பி. ப 1. 30— 3.00 மணிவரை |
| கலை, வர்த்தகம் | 11-09-89 பி ப 1. 30 — 3.00 மணிவரை; 12-09-89 மு.ப 9. 30 —12.00 மணிவரை |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப்புத்தகம்/ புதுப்பிக்கப்பட்டது.

—பதிவாளர்

(சி/3635)


### ஆஸ்பத்திரிகளில் வேலைநிறுத்தம்:

## கடமை செய்யாதோருக்கு சம்பளம் இல்லை—ரேணுகா

கொழும்பு, செப். 8

வேலைக்குச் சென்று கடமை செய்யாத ஆஸ்பத்திரி ஊழியருக்குச் சம்பளம் வழங்கப்படமாட்டாது.

சுகாதார, மகளிர் நல விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் சகல ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரிகளையும் நேற்று முன்தினம் சந்தித்தார்.

அப்போது அவர் முன்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

பொது நிர்வாக சட்டதிட்டங்களுக்கு அமைய கடமையில் ஈடுபட மறுக்கும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படக் கூடாது என்று அமைச்சர் அப்போது தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரகால வேலைநிறுத்தத்தின்போது "வேலைக்குச் செல்லலாம்; கடமையில் ஈடுபடக்கூடாது" என்று ஜே. வி. பி யினர் ஊழியர்களுக்கு 'உத்தரவிட்டிருந்தது' தெரிந்ததே. (ஓ-எ)

## சிவானந்தர் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், செப். 8

சுவாமிசிவானந்தரின் பிறந்த தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி வயோதிபர் இல்லத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வயோதிபர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

சுவாமி சிவானந்தரின் பிறந்த தினத்தையொட்டிய பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலின் அருகில் உள்ள திவ்ய ஜீவன சங்கமண்டபத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

## பருத்தித்துறை வங்கியில் இன்றும் நாளையும் நிவாரணம்

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் இன்றும் நாளையும் மீளக் குடியமர்தல் நிவாரணப் பணம் வழங்கப்பட இருக்கிறது.

இன்று வெள்ளிக்கிழமை நிவாரணம் பெறவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ அல்வாய் மேற்கு— 534
- ★ அல்வாய் வடக்கு— 43
- ★ புலோலி மேற்கு— 36
- ★ புலோலி கிழக்கு— 13
- ★ வல்லிபுரம்— 58
- ★ அம்பன்— 51

நாளை சனிக்கிழமை நிவாரணம் பெறவுள்ள கி. சே. பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ நாகர்கோவில் வடக்கு —314
- ★ நாகர்கோவில் தெற்கு —179
- ★ துன்னாலை வடக்கு — 262
- ★ குடத்தனை கரையூர் —108
- ★ பருத்தித்துறை— 141
- ★ வியாபாரிமூலை— 47
- ★ வல்வெட்டித்துறை வடக்கு— 75
- ★ வல்வெட்டித்துறை தெற்கு— 55

இன்றும் நாளையும் முதற்கட்டமான ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட அட்டை, அடையாள அட்டை, இரண்டு ரூபா முத்திரை ஆகியவற்றுடன் வருமாறு வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஓ-118)

### சாவகச்சேரி:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பெருமாளையும் மற்றும் முக்கிய அதிகாரிகளையும் பலமுறை சந்தித்துப் பேசியதை அடுத்தே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஒரு விரிவான திட்டத்தின் அடிப்படையில் அத்தியாவசியத் தேவைகளை இனங்கண்டு நிதியைப் பங்கீடு செய்வதற்கான நடவடிக்கைகளில் திரு. ரவீந்திரன் ஈடுபட்டுள்ளார். சனசமூகநிலையங்களும், கிராம முன்னேற்றச்சங்கங்களும் முன்கூட்டியே தொடர்புகொண்டு தமதுதேவைகளைத் தெரிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

சாவகச்சேரித் தொகுதியைப் பொறுத்தவரை முன்னெப்பொழுதும் இவ்வளவு பெருந்தொகைப்பணம் இத்தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## இந்திய உதவிப் பொருள் திருமலை வருவதில் தாமதம்

கொழும்பு, செப். 8

நிவாரணப் பொருள்களுடன்வரும் இந்தியக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலில் பொருள்களை ஏற்றுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளே தாமதத்திற்குக் காரணம் என்றும் அவர் சொன்னார்.

நேற்று முன்தினம் (புதன் கிழமை) இக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைவதாக இருந்தது.

இலங்கை அரசின் அங்கீகாரத்துடன்தான் கப்பல் திருமலைவரும். நிவாரணப் பொருள்கள் இருநாடுகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படும்.

இந்திய அரசின் சார்பில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணிபுரியும் இரண்டாவது செயலாளர் திருமதி நிருபி [புனர்வாழ்வு] பொறுப்பு ஏற்பார். இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் யார் என்பது தெரியவில்லை.

இப்படி இந்தியத் தூதரகப் பேச்சாளர் சொன்னார். (ஓ-எ)

### அமைதிப்படை..

அமைச்சர் பி. வி. நரசிம்மராவுடன் இலங்கை ஜனாதிபதியின் சிறப்புத் தூதர் பிரட்மன் வீரக்கூன் முதலில் பேச்சுக்கள் நடத்தினார்.

கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு நேற்று பெல்கிறேட்டில் முடிவடைந்தது. (ஓ-எ)

### தென்பகுதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் பொதுமக்கள் தற்போது அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இவ்வாறு சிறில் ரணதுங்க மேலும் தெரிவித்தார். (அ—)


# 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்:
31 - 01 - 1958

சிவனின் அடியில்:
09 - 08 - 1989



## திரு. அ. கனகரட்ணம்

அறிவுச் சுடரே அண்ணா!
எம்மை விட்டுப் பெரும் பயணத்தை
ஏன் தொடர்ந்தீர்கள்?
உங்கள் கண்ணொளியின் கதகதப்பில்
வளர்ந்தோமே
எம் கண்ணெல்லாம் குளமாக
ஏன் மாற்றி விட்டீர்கள்?
உங்களுக்கு நடந்த சதி எமக்குத் தெரியுமண்ணா
கண் மூடிக்கொண்டு நீங்கள் சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளோம்
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றீர்கள்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?

(2126)


# மரண அறிவித்தல்கள்

## திரு. சின்னப்பு செல்லையா

திரு. சின்னப்பு செல்லையா 07-09-1989 இல் காலமானார்.

இவர் செ. சிவராசாவின் (Excise Inspector, Chavakachcheri) அன்புத் தந்தையும், திருமதி விக்கேஸ்வரி சிவராசாவின் அன்பு மாமனாரும், செல்வி மாலதி (ஆசிரியை, ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில் மேற்கு), ஜெயசீலன் (ஜேர்மனி), சியாமளா தயாபரன் (கனடா), மஞ்சுளா, ஜெயதேவன், கீதா, ஜெயந்தி, ஜெயரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும், நடராசா தங்கச்சியம்மாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 08-09-1989 வெள்ளிக்கிழமை இன்று பிற்பகல் 2-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னையா லேன், செ. சிவராசா
ஆனைக்கோட்டை. (2124)

## திருமதி கந்தையா மனோன்மணி

திருமதி கந்தையா மனோன்மணி காலமாகிவிட்டார்.

இவர் நல்லூர் சட்டநாதர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வியாபாரி மு. கந்தையாவின் அன்பு மனைவியும், வைத்தியர் சபாரத்தினம், இராசாம்பாள், இராசரத்தினம், செல்வரத்தினம் (U.K) ஆகியோரின் தாயாரும், V. V. இராமலிங்கம், (ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், நல்லூர்), கனகை, மனோகரி, கலாராணி (U.K) ஆகியோரின் மாமியாரும், இ. சந்திரகுமார் (கிராம சேவையாளர், நல்லூர் வடக்கு), சிவஅன்பு (U.K), சாந்தநிதி, சோமவதி, சற்குணேஸ்வரன், இராசேந்திரன், கயல்விழி, எழிலரசி, சிவகுமாரி, ஆனந்தி, சுதாசினி, யாழினி, ஜெகன், மயூரன் ஆகியோரின் பாட்டியும், சிந்துஷாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-09-1989 வெள்ளிக்கிழமை இல. 8, இராச வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், V. V. இராமலிங்கம்
இராச வீதி, நல்லூர். (1930)

## திருமதி இரத்தினம் சின்னம்மா

திருமதி இரத்தினம் சின்னம்மா 07-09-1989 அன்று காலமானார்.

இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி குணபாலசிங்கம், கனகலிங்கம் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), அன்னலட்சுமி, தில்லையம்பலம் ஆகியோரின் தாயாரும், இராசலிங்கம், இரத்தினசிங்கம், மல்லிகா, ஆனந்தவல்லி, இலங்காதேவி ஆகியோரின் மாமியாரும், நந்தகுமார், கருணாகரன் (கனடா), சிவகுமார், ஜெயக்குமார் (கனடா), ஜெயகுமாரி, செந்தில்குமார், கருணாவதி, சிவாஜினி, வரதராசா, விஜயலட்சுமி, தருமராசா, கிருஷ்ணராசா, யாழினி, கைலைவாசன், கேசவன், மாதவன், ரூபினி ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
விளையாட்டரங்க வீதி, இ நந்தகுமார்
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (1931)

## திருமதி விநாசித்தம்பி அன்னம்

அளவெட்டி திருமதி விநாசித்தம்பி அன்னம் (6-9-89) இல் அமரத்துவம் எய்தினார். இவர் அருட்கவி சீ. விநாசித்தம்பியின் தர்மபத்தினியாரும், அருந்ததி, ஸ்ரீரங்கநாயகி, சிவலிங்கராணி (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (கனடா), சிவகாந்தன் (பிரான்ஸ்), ஆகியோரின் அருமைத் தாயாரும், த. குணபாலசிங்கம், சு. திருச்செகநாதன் [ஆசிரியர் அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை], S. ஜெயமலர் [கனடா] ஆகியோரின் அருமை மாமியாரும், கு. கிரிதரன் [கனடா], கு. ஞானசுதன், கு. மாலா, தி. வரோதயன், தி. வரதவாணி, கு. கவிருபா, ஸ்ரீவிஜிதன் [கனடா], ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரது சமாதி நிகழ்ச்சி [7 9-89] வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது என்பதை எமது உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
'சிவசக்தி'
அளவெட்டி தெற்கு, அருட்கவி சீ. விநாசித்தம்பி
அளவெட்டி. [2122]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 332/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org